வதற்கும் இங்கே நிதியைப் போடுவதற்கான வாய்ப்பும் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்ட குறைகள் எல்லாம் போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு துணைக் கேள்வி தான். நீங்கள் மூலக் கேள்வி போடவில்லை. பட்டுக் கோட்டை வரை போவதற்கு பதில் பக்கத்திலே இருக்கிற அடையாறிலே நீங்கள் கேட்டு விவரங்களைத் தெரிந்துகொண்டு வந்திருககலாம். திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ளவர்கள் தொழில் துவங்க, வெளிநாட்டில் வாழும் உறவினர்கள் அல்லது நண்பர்கள் முதலீடு செய்து என்.ஆர்.ஐ. வங்கிக் கணக்கின் மூலம் வெளிநாட்டுப் பனத்தைப்பெற்று இங்குள்ளவர்கள் பெயரிலேயே தொழில் துவங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே உறுப்பினர் செல்வராஜ் அவர்களுக்கும், பட்டுக்கோட்டை பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் சொன்ன பதிலை நம்முடைய சுந்தரவேல் அவர்களின் கேள்விக்கும் பதிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வெளி நாட்டில் வாழ்கின்ற இந்தியர்கள் மற்றும் தொழில் தொடங்கு வோர் இங்கே தொழில் தொடங்க வேண்டுமென்று சொன்னால் நேரடியாக அவர்கள் இங்கே வந்து தொழில் தொடங்கலாம். அவர்களின் நிதியை இங்கே போடவேண்டுமென்று சொன்னாலோ அல்லது அந்த நிதியிலிருந்து வேறு தொழில்களுக்கு அதைப் பயன்படுத்தவேண்டுமென்று சொன்னாலோ அதற்காகத்தான் தொழில் வளர்ச்சி நிறுவனம் அதாவது 'டிட்கோ' மூலம் மியூசுவல் பண்டு என்கிற ஒரு அமைப்பை உருவாக்கி இருக்கிறோம். அவர்கள் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 493, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

493—

பூம்புகார் தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல்.

*16871—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

முற்பகல் 10-50

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி கடைமடைத் தொகுதி, அங்கே விவசாயிகள் எல்லோரும் 50 சதவிகிதம் கரும்பைப் பயிராகக் கொண்டுள்ளார்கள். அங்கே நிலங்கள் தேவையான அளவுக்கு ஆயிரம் ஏக்கர் நிலம் பூம்புகார் தொகுதியிலே தில்லையாடி ஊராட்சியிலே இருக்கின்றது. நல்ல குடி நீர் வசதி இருக்கிறது. ஆகவே, இதுவரையிலும் பூம்புகார் தொகுதியிலே ஒரு தொழில் கூட ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே புரட்சித் தலைவி அரசு தயவு கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்து ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைக்கப்படுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி காயிதே-மில்லத் மாவட்டத்தில் இருக்கின்றது. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஒன்று நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி பெயரிலே அமைந்திருக்கின்ற தலைஞாயிறிலே இருக்கின்ற கூட்டுறவு சர்க்கரை ஆலை. இரண்டு, திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை என்கின்ற தனியார் ஆலை. என். பி. கே. ஆலையைப் பொறுத்த வரையில் தற்போதுள்ள அரவைத் திறன் நாள் ஒன்றுக்கு 1,250 மெட்ரிக் டன்னாக இருந்தது. இப்போது 3,500 மெட்ரிக் டன்னாக உயர்த்துவதற்கு அரசு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலைக்கு நாள் ஒன்றுக்கு 3,500 மெட்ரிக் டன்கள் அரைவைத் திறன் என்ற வீதத்தில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 6 லட்சம் மெட்ரிக் டன்கள் கரும்புகள் தேவைப்படும். இந்த 6 லட்சம் மெட்ரிக் டன்களை உற்பத்தி செய்ய சுமார் 6 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்யப்பட வேண்டும். இரண்டு, ஆரூரான் சர்க்கரை ஆலையின் தற்போது அரைவைத் திறன் நாள் ஒன்றுக்கு 2,000 ஆக இருந்ததை 2,500 ஆக உயர்த்தி அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆலைக்கு ஆண்டு ஒன்றுக்கு தேவையான கரும்பு 4.3 லட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். இந்த ஆலைக்குத் தேவையான கரும்பு சுமார் 4,300 ஹெக்டேர் நிலப் பரப்பில் சாகுபடி செய்ய வேண்டி இருக்கின்ற காரணத்தினால் பூம்புகார்ப் பகுதியில் மேலும் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையோ அல்லது தனியார் ஆலையோ ஆரம்பித்தால் போதிய கரும்பு இருக்காது. கரும்பு இல்லாமல் ஆலை ஆரம்பிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நிறைய சாகுபடி இடங்கள் உள்ளன. 50 சத விகிதத்திற்கு மேலாக பூம்புகார் தொகுதியிலே கரும்பு சாகுபடி செய்யப்பட்டுவருகின்றன. தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலை 40 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. அதைப்போல வடபாதிமங்கலம் ஆலை 60 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. ஆகவே பூம்புகார் தொகுதியில், தொழிலே இல்லாத அந்தத் தொகுதியில், அவசியம் கண்டிப்பாக நம் தொழில் அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி இதய தெய்வம் ஆட்சியிலேவருகின்ற ஆண்டிலேயாவது ஒரு கரும்பு ஆலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதி ஒரு கடலோரப் பகுதி. இப்பகுதி மணல் பாங்கானது. அங்கே நிலத்தடி நீர் உப்புத் தண்ணீர் கொண்டதாக இருக்கிறது. கரும்பு அதிகம் சாகுபடி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும் தஞ்சை, நாகை ஆகிய மாவட்டங்களில் உணவு உற்பத்தியை முக்கிய நோக்கத்துடன் கொண்டு நெல் சாகுபடிக்கு அரசு முக்கியத்துவம் கொடுக்கிறது. எனவே கரும்பு சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க இயலாது. மேலும் 40 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் தலைஞாயிறுக்கு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான் தமிழ்நாடு அரசு தூரமாக இருந்து கரும்பு எடுப்போருக்கு வாடகையையும் ஆலை ஏற்றுக்கொள்கின்ற காரணத்தினாலே அந்த பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே பூம்புகார் பகுதியிலே சாகுபடி செய்கின்ற கரும்புகளை தலைஞாயிறு சர்க்கரை ஆலைக்கோ அல்லது ஆரூரான் சர்க்கரை ஆலைக்கோ அனுப்புவதில் எந்தவிதமான சிரமமும் இருக்காது. அதற்குண்டான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆக இந்த அளவோடு நம்முடைய பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மன நிறைவு கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 494, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

494—

வன விலங்குகளால் அபாயம் நேரிடும்போது இழப்பீட்டுத் தொகை வழங்குதல்.

*14612—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—